REGISTERED No. M. 1014.

உ

ஸ்ரீ வாணிசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.
வீடுபெறநில்.

வெண்டாமரை ௫.	1917-ம் ஆ மார்ச்சு மீ	இதழ் ௩.

பத்திராதிபர்:— சி. பங்காருப் பத்தர்,
கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்,
புதுவை.

வருடச் சந்தா

உள்ளூரார்க்கு ரூ 1	வெளிநாட்டுக்கு ரூ 2
வெளியூரார்க்கு ரூ 1¼	தனிச் சஞ்சிகை அணா 2

உள்ளுறை.

பக்கம்.

அவைகளில் ஆண்டு விழாக் கொண்டாட்டங்கள் :— பத்தி ராதிபர். 49
ஜீரண விஷயத்தில் கவனிப்பு :— ஸ்ரீ கலவை - சங்கர்செட்டி யார், புதுவை. 53
சற்புத்திரன் சஞ்சலம் :— ஸ்ரீ சு. அ. சுப்பராயப்பிள்ளை. ... 54
மருத்துவப் பெட்டி :— ஓர் மருத்துவன். 59
பதினெண் கீழ்க்கணக்கு:— ஸ்ரீ திரு. சுப்பிரமணியதேசிகர், காஞ்சீபுரம். 60
புதுவயல் லலிதாவிலாஸ் ரீடிங் ரூம் அன்ட் பாட்மின்டன் கிளப் முதலாவது ஆண்டு நிறைவு விழாக் கொண் டாட்டம் :— கண்டு மகிழ்ந்தோன். 63
படிக்காசுப்புலவர் சரிதம் :— ஸ்ரீ சி. கு. நாராயணசாமி முதலியார், கோயமுத்தூர். 65
காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாத சுவாமி மகோற்சவ உபன் னியாசங்கள் :— சைவ சமயாபிமானி. 68
நியாயமாலா :— இதோபதேசி. 70
சந்நியாச விஷயம் :— இதோபதேசி. 71

கலைமகள் கழகம்.

புதுவைக் கலைமகள் கழகத்தின் ஆறுவது ஆண்டு விழாக் கொண்டாட்டம், நிகழும் பிங்கள ஞு வைகாசி மீ கஅ, ககூ, உ0, உக (1917 மே 31, ஜூன் 1, 2, 3) இந் நாட்களில், ஸ்ரீ பாலைய சுவாமிகள் மடாலயத்தில், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடத்துச் சுவாமிகள் தலைமையின்கீழ் நடை பெறும். அக்காலத்தில் பல வித்துவான்கள் வந்து பல அரிய பெரிய பொருள்களைப்பற்றி உபன்னியசிப்பார்கள். நடைபெறு முறை முதலியன பின்னர்த் தெரிவிக்கப்படும்.

தி. திருப்புளிசாமி ஐயர்,
காரியதரிசி.

உ

ஸ்ரீ வாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை ரு.	1917-ம் ஆடு மார்ச்சு மீ	இதழ் ரு.

அவைகளில் ஆண்டு விழாக் கொண்டாட்டங்கள்.

இப்போது சில காலமாகப் பல விடங்களிலும், சபையென்றும், சங்கம் என்றும், சமாசம் என்றும், கழகம் என்றும் பெயர்கொண்டு விளங்கும் அவைகளில், ஆண்டுகள் தோறும் திருவிழாக் கொண்டாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இக் கொண்டாட்டங்களின் நோக்கம் என்னை? இவற்றால் விளையும் பயன் எது? அது எவ்வகையால் உண்டாகின்றது? என்பவற்றைப்பற்றி இங்குச் சிறிது ஆராய்வோம்.

சங்கங்கள் கல்வியை வளர்த்தல், சமயவுணர்ச்சியைப் பரப்புதல் நன்னெறியில் நடப்பித்தல் முதலிய பல்வகை நோக்கங்களையுடையன. உதாரணமாக இங்குக் கல்வி வளர்ச்சிக்குரிய அவையையெடுத்துக்கொள்வோம். இவ் வவையில் சேரும் அவயவிகள் பல நூல்களை ஆராய்கின்றார்கள்; அதனால் பேரறிவு பெறுகின்றார்கள்; உண்மைப்பொருளை யுணர்ந்து உவப்புறுகின்றார்கள். "தக்க பெரியோர் தமக்கியல்பு தாம்பெற்றுள்ள பேறெல்லாம் மிக்க வுலகம் பெறுகவென வேண்டிக்கோடல்" என்றதற் கேற்ப, அவையினர்,

தாம் அறிந்த உண்மையை, தாம் அடைந்த இன்பத்தை, தம்மைப் போல் மற்றவர்களும் அறிந்து பெறவேண்டுமென்று கருதி, சங்கத்தின் ஆண்டுப் பிறப்பு நாளேயோ அல்லது நிறைவையோ கொண்டாடுவது என்ற முறையை யேற்படுத்திக்கொண்டு, அந்நாளில் பொது சனங்களை ஒன்றுகூட்டி, பல பொருட்களைப்பற்றிப் பேசுதல் முதலிய சிறப்புக்களைச் செய்கின்றார்கள். இம் முறையால் அவர்கள் எண்ணம் ஒருவாறு நிறைவேறுகிறது. ஆதலின் சங்கத்தவர்கள் தாம் அடைந்த நன்மையைப் பொது சனங்கள் யாவரும் அடையவேண்டு மென்பதே அவைகளில் நடத்தும் ஆண்டு விழாக் கொண்டாட்டங்களின் நோக்கமாகும்.

இக் கொண்டாட்டத்தால் விளையும் பயன்களோ அளவில்லன. அந்நாளில் கற்ற கேட்ட பெரியோர்களும் புலவர்களும் பலர் வந்து குழுமுகின்றார்கள். தாங்கள் எவ்வளவோ நாட்களாக அரிதிற்றேடிய அரிய பெரிய பொருள்களையெல்லாம் வாரியிறைக்கின்றார்கள். நூல்களில் இலைமறைகாய்போல் மறைந்து கிடக்கும் நுண்ணிய பொருட்களை யெடுத்துக் கொட்டுகின்றார்கள். சிலரால் உலக இன்பம் அடைதற்குரிய வழி உரைக்கப்படுகிறது. சிலரால் துறக்க வின்பம் துய்த்தற்குரிய ஆறு சொல்லப்படுகிறது. சிலரால் வீட்டின்பம் பெறுதற்குரிய நெறி விளக்கப்படுகிறது. இவற்றால் பிறர்க்கு உண்டாகும் பெரும்பயன், செவியால் எல்லாப் பொருளையும் கேட்டறிதலாகிய கேள்விச் செல்வமன்றோ! கேள்விச் செல்வத்தின் சிறப்பை எவரே அறியாதவர்! "செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச் செல்வம் செல்வத்துளெல்லாம் தலை" என்பது திருவள்ளுவனார் செம்மைமொழியன்றோ! கல்லாதவர்களும் கேள்வியால் கல்வியறிவைப் பெறுகின்றார்கள். கற்றவர்களும் தாங்கள் அறிந்தவற்றில் ஐயம் முதலியன நீங்கப் பெற்று இன்புறுகின்றார்கள். நல்லாசிரியரை யடுத்துப் பலநாட்கள் பல நூற்களைப் படித்துப் பெறவேண்டிய அறிவை இச் சில நாளே கேட்பவர்க்குத் தருகின்றன வென்றால், இக் கொண்டாட்டத்தின் பெருமையை நாம் என்னென்றெடுத்துரைப்பது! பல நல்லோர்களைக் காணுதலினாலும், அவர்களது நல்ல சொற்களைக்

கேட்டலினானும், அவர்களோடு கலந்து பழகுதலினானும் உண்டாகும் இன்பமும் நன்மையும் இவ்வளவென்று எவர் அறிவார்? அக் கொண்டாட்டத்திலிருந்து நன்மையடைந்தவர்கள்தான், இன்பம் நுகர்ந்தவர்கள்தான் அவற்றை அறிவார்கள். என்ன இன்பம்! என்ன நன்மை! “செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கு மீயப்படும்” என்ற திருக்குறளின் பொருளை இக் கொண்டாட்டநாள் எவ்வளவு நன்றாக விளக்குகிறது! ஆதலின், கேள்விவாயிலாக மக்கட்கு உலக அறிவையும் உண்மை யறிவையும் தருதலினாலே, இக் கொண்டாட்டத்தால் விளையும் பயன், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களின் பேறு என்பதில் சிறிதும் ஐயமே யில்லை.

இனி அப்பயன் எவ்வகையால் நன்கு அடையப்படுகிறது என்பதையும் கருதுவோம். இப்போது அக் கொண்டாட்டம் எவ்வாறு நடத்தப்படுகிறது என்பதை முதற்கண் தெரிந்துகொள்வது நலம். கொண்டாட்டத்தில் அவையின் மற்றை யழகுகள் அதாவது செவிக்கின்பந் தரும் இசைப்பாட்டுகள், இசைக் கருவிகள், கண்ணுக்கின்பந்தரும் ஒப்பனைகள் முதலியவற்றைப் பற்றி இப்போது யாம் பேசவரவில்லை. முக்கியமாக அவைத் தலைவர், உபன்னியாசகர்கள் என்ற இவர்களைப்பற்றியே பேசுகின்றோம். விழாக்கொண்டாடுதற்கென்று கூடிய அப் பெரிய கூட்டத்திற்குத் தகுதியுள்ள ஓர் தலைவர் தெரிந்தெடுக்கப்படுகிறார். அத் தலைவர் ஐயந் திரிபறக் கற்றவராகவும், உலக அறிவும் உண்மையறிவும் படைத்தவராகவும், பெரிதும் சொல்வன்மை யுடையவராகவும், பொறுமை முதலிய நற்குணங்களை யுடையவராகவும், அருளுடையவராகவும் விளங்குவார். அவர் அவைக்குத் தலைமை வகித்ததும், அந்நாளில் பலர் ஒன்றுகூடி யிருத்தலின் காரணத்தையும், அச் சங்கம் அதுவரையில் செய்துவந்த வேலையையும், அதனாலேற்பட்ட பயன் முதலியவற்றையும் எடுத்துப் பலரும் அறிந்து களிக்கும்படி முன்னுரையாக மொழிவார். பின்னர், அவர் தலைமையின்கீழ், கற்ற கேட்ட அறிஞர் பலர், தங்கள் ஆராய்ச்சியில் கிடைத்த அரிய பெரிய பொருள்கள் பலவற்றை, மற்றொன்று

விரித்தல் முதலிய குற்றங்கள் நேராவண்ணம் அழகுபடப் பேசி மக்கட்கு அறிவையும் இன்பத்தையும் ஊட்டுவார்கள். ஒவ்வொரு நாள் முடிவிலும் தலைவர், புலவர்கள் எடுத்துப் பேசிய பொருட்களின் அருமை பெருமைகளை முறையே யெடுத்துப் பாராட்டுவார். உபன்னியாசத்தில் அவர்களால் சொல்லாது விடப்பட்டதும், அவ்விடத்திற்குப் பொருத்தமாக அப்போழ்து தமக்குத் தோன்றியதுமான அரும்பொருள்களையும் அதனோடு சேர்த்து அழகுபடுத்துவார். குற்றங்களை மறைக்கும் குணமுடையவராயினும், உபன்னியாசத்தில் பலர்க்கும் முரணான பொருள் சொல்லப்படுமானால், பொது நன்மையைக் கருதி அதனை மறுப்பார். இவ்வண்ணம் தக்க தலைவரையும், தக்க புலவரையும்கொண்டு நடத்தப்படும் விழாக் கொண்டாட்டங்கள்தான் மக்கட்குத் தக்க பயனை விளைவிக்கும். இதற்கு மாறாக நடக்கும் கொண்டாட்டங்கள் அவ்வளவு பயன் தாமாட்டா.

அவைக்குத் தலைவராக நியமிக்கப்படுபவருள் சிலர், தங்கள் கடமை இன்னதென்றுணராதவர்களாய், பிறர் பேசுவதையே தாமும் அவர்கள் பேச்சுக்கு முன்னும் பின்னுமாக அதிகப்படப் பேசி, உபன்னியாசகர்கட்கும், கேட்கும் அறிஞர்கட்கும் ஏற்படும் வெறுப்பையும் கருதாமல், தமது வல்லமையைக் காட்டுவதிலேயே நோக்கமுடையவர்களாகக் காணப்படுகிறார்கள். சில தலைவர்கள், பேசுபவர்கள் பேச்சில் குற்றங்கள் எங்குள்ளனவென்றுதேடி எடுத்துக்கூறி, அவர்கள் நெஞ்சம் புண்படச் செய்யும் தீய இயற்கையுடையவர்களா யிருக்கிறார்கள். உபன்னியாசகர்களுள் சிலரும் பொது சனங்களின் நன்மையைக் கருதாமல், தங்கள் வல்லமையைக் காட்டுவதிலேயே யெண்ணமுடையவர்களாகவும், உபன்னியாசத்தின் முறையறியாது, தாம் பேசஎடுத்த பொருளை மறந்து மனம்போனபடி யெல்லாம் பேசுகின்றவர்களாகவும், அவையில் பேசுவதற்குப் போதிய கல்வியில்லாதவர்களாகவும் காணப்படுகின்றார்கள். இப்படிப்பட்ட தலைவர்களையும், உபன்னியாசகர்களையும் கொண்ட ஒரு அவையின் விழாக்கொண்டாட்டம் எப்படி முழுப்பயனைத்தரமுடியும்?

அன்றியும், ஒரு சங்கத்தார், தாங்கள் கொண்டாடும் திருவிழாவில், தாம் செலவு செய்யும் பொருளுக்குத் தக்க பயன் கிடைக்கும்படி பார்க்கவேண்டும். சிறிய பொருளைக் கொண்டு பெரும்பயன் விளையச்செய்வது தலைப்பட்ட அறிவாளர் செயலாகும். பொருளின் அளவு பயனுறைச் செய்வது இடைப்பட்ட அறிவாளர் செயலாகும். மலையைக் கெல்லி எலிபிடிப்பதுபோல, பெரும்பொருளைக்கொண்டு சிறிய பயன் கிடைக்கச் செய்வது கடைப்பட்ட அறிவாளர் செயலாகும்.

ஆதலின், ஒவ்வொரு அவையினரும், ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில், தக்க தலைவரையும், நாவன்மை மிக்க புலவரையும் பெற்று, பொருட் செலவுக்கும், மெய்வருத்தத்திற்கும் தகுந்த பயன் கிடைக்கும்படி அதனை ஒழுங்குபெற நடத்தி யாவர்க்கும் நன்மை உண்டுபண்ணுதல் வேண்டும்.

பத்திராதிபன்.

ஜீரண விஷயத்தில் கவனிப்பு.

நம் தேகத்திலுள்ள எந்த உறுப்பும் அடிக்கடி உபயோகப்படுத்தப் படாவிட்டால் நாளடைவில் குன்றிப்போவதைப்போல் நம்முடைய ஜீரண கோசமும் தனக்கு வேண்டிய உணவுப்பொருள்களைப் பெறாவிட்டால் குன்றிவிடும். அதற்காக "மெடிகல் ரிகார்ட்" என்னும் வைத்தியப் பத்திரிகையில் மாக்ஸ் எயின்ஹோர்ன் என்பவர், ஆரோக்கியமுள்ள மனிதனுடைய சாப்பாட்டில், கடினமாய் ஜீரணமாகக்கூடிய உணவுப்பொருள்களும் சுலபமாய் ஜீரணமாகக்கூடிய உணவுப்பொருள்களும் கலந்தே இருக்கவேண்டும் என்கிறார். அப்பொழுதுதான் ஜீரணகோசத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் சரிவரத் தன் வேலையைச் செய்ய இடமிருப்பதோடு, அது எவ்விதத்திலும் குன்றிப்போகாது.

இறைச்சி உண்பவர்கள் அதை ஒருநாளுக்கு இருமுறைக்குமேல் சாப்பிடக்கூடாது. அதுவும் நல்ல வயதாளிக்குப் பத்து தோலாவுக்கு மேற்படக்கூடாது; காய் கறி, ரொட்டி, வெண்ணெய், பழவர்க்கங்கள் முதலியவைகளோடு சேர்த்துத்தான் அதைப் புசிக்கவேண்டும்.

தாகமிருந்தால் புசிக்கும்பொழுதும், வெவ்வேறு போஜனங்களுக்கு இடையிலும் சுத்த நீர் குடிக்கவேண்டும். நல்ல ஆகாயத்தில் வியாயாமம் (தேகப்பயிற்சி) செய்துவரவேண்டும்: உலாவுதல், குதிரை சவாரிசெய்தல், படகுகளைச் செலுத்துதல் முதலியவை வெகு பயன்படக் கூடியவை.

சுருங்கச்சொல்லின், ஜீரணசக்தியைச் சரிவர வைத்துக்கொள்ள விருப்பமுள்ளவர்கள், சகஜமான வாழ்க்கையும், ஓய்வுடன்கூடிய வேலையும், நல்ல பொழுதுபோக்கும், வேளையில் போஜனமும், பலவகைப்பட்ட மிதமான ஆகாரமும் உடையவர்களாக இருக்கவேண்டும். அவர்களுக்கு வேண்டிய அளவு நீர் குடிப்பதும், மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்வதும் அவசியமாகும்.

கலவை – சங்கரசெட்டியார்,
புதுவை.

சற்புத்திரன் சஞ்சலம்.

ஓர் சோகக் கதை.

(வெண்டாமரை ௫, இதழ் ௨, 38-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆசிரியனுரை:— காந்திமதியின் கணவன் ஜீவரத்தினம் இருக்கிறானே, அவனுக்குச் சூதாடுவதில் அதிக பிரியமென்று நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாமல்லவா? — சரி, சாவித்திரியின் மாமன் இரத்தினசாமியும் ஒரு சூதாடி. சாவித்திரியின் தாய் காலஞ்சென்ற பிறகு இந்த இரண்டு இரத்தினங்களுக்கும் பழக்கம் ஏற்பட்டது. ஆகையால் ஜீவரத்தினம் அடிக்கடி சாவித்திரி வீட்டுக்கு வருவது வழக்கம். அவன் யாரிடத்திலும் தளுக்காகப் பேச வல்லவன் என்றும் உங்களுக்குத் தெரியுமே. ஆகையால் இரத்தினசாமிக்கு நெருங்கிய மித்திரனுமாயினன். எவ்வளவு தூரம் நெருங்கியவன்? இரத்தினசாமியின் மனைவி, அவன் மகள் அன்னபூரணி, சாவித்திரி ஆகிய வீட்டுப் பெண்களோடுங் கூடச் சாதாரணமாகப் பேசுகிறவரையில். முதல் முதல் சுமார் இரண்டு வாரம் சாவித்திரி அவனோடு கலகலவென்றே பேசினள். பின்னர்,

அவன் வருகையே அவளுக்கு அருவருப்பாயிருந்தது. ஆகையால் அவன் முன்பு அவள் எதிர்ப்படுவதுமில்லை. ஒருகால் எதிர்ப்பட்டாலும், அத்தியாவசியகமா யிருந்தாலன்றி அவனோடு பேசுவதுமில்லை.

திடீரென இரத்தினசாமியின் மனைவி இறந்தாள். சுமார் ஒரு மாதமாயிற்று. திடீரென, சாவித்திரிக்குற்ற துன்பங்களெல்லாம் நின்றன. நெல் குற்றல் வீடு பெருக்கல் முதலிய வேலைகளெல்லாம் புரியப் பணிப்பெண்கள் அமர்த்தப்பட்டார்கள். அன்னபூரணியம்மாள் சமையல் முதலிய இதர வேலைகளிற் புகுந்ததோடு, தன் மைத்துனி சாவித்திரியின் புடவையைக் கூடத் துவைக்கலாயினாள். சாவித்திரிக்கு வேலையேயில்லை. அன்றியும் பிரதிதினமும் வெந்நீரில் நீராடும்படி மன்றாடி நிர்ப்பந்திக்கப்பெற்றாள். நினைத்து நினைத்துப் பார்த்தாள் சாவித்திரி. தன் வாழ்க்கையில் திடீரென இப்புதிய மாற்றம் நிகழ்ந்ததின் அர்த்தம் அவளுக்குத் துலங்கவேயில்லை. ஆனால் சீக்கிரத்தில், ஒருநாள் அவள் மாமன் அவளை அழைத்துக் கூறலாயினன் :—

“உன் அத்தையின் துர்ப்போதனைக்குச் செவிகொடுத்து, அம்மா சாவித்திரீ! உன்னை நான் பல துன்பங்களுக்குள்ளாக்கினேன். நீ நல்ல குழந்தையாகையால் பூமிதேவியைப்போல் பொறுமையா யிருந்தாய். நீ பொறுத்தாலும், கடவுளாற் பொறுக்கக்கூடவில்லை. ஆகையினால் தான், நீ பட்ட கொடுமைகளுக்கெல்லாம் முதற் காரணமாகிய உன் அத்தை திடீரென அகால மரணமடைந்தாள். உன் பழிதான் அவள் கழுத்தைச் சுற்றியது. இதை இப்போதுதான் நானும் உணருகிறேன். இதை நினைக்க நினைக்க என் மனம் பதறுகிறது, வயிறு குமுறுகிறது. அக்காள் இருந்தால் உன்னை இக்கோலத்தில் காணச் சகிப்பாளா! இதற்குத்தானா உன்னை அவள் என்னிடம் ஒப்புவித்தாள்! ஐயோ குழந்தையே! எது எப்படியிருந்தாலும் நீ, என்னோடு ஒரு வயிற்றிலுதித்த அக்காள் மகள். என் தேகத்தில் ஓடுகிற இரத்தம் உன் தேகத்தில் ஓடுகிறது. எங்கேயோ இருந்து வந்த உன் அத்தையின் இச்சை வலையிற் சிக்கி மதிமயங்கி அவள் பேச்சைக் கேட்டுக் கெட்டேன். அவள் இப்பொழுது என்ன கதி அநுபவிக்கிறாளோ! ஆனால் இனி உன்னைத் தங்கந் தங்கமாக வளர்ப்பேன். ஆகையினாலே சாவித்திரீ, என்னுடைய பழங் கொடுமைகளை மறந்துவிடு. இனி இவ் வீட்டிற்கு நீயே எஜமானியாக இருப்பாய். அன்னபூரணி வயதில் உனக்கு மூத்தவளாயிருந்தபோதிலும் அவள் உன் அதிகாரத்திற்குட்பட்டு உனக்கடங்கியே நடப்பாள். வீட்டுக் குடித்தன நிர்வாகம் இனி உன் பொறுப்பு. உன் வீடு, உன் வாசல்,

உன் நெல், உன் வருமானம், எல்லாம் உன்னுடையது. குடித்தனப் பொறுப்பை உன் தலையில் சுமத்தினேன் என்று கவலையடையாதே. நீ எஜமானியாக இருந்து யாவரையும் வேலைவாங்கவேண்டுமே.யல்லாமல் யாதொரு வேலையும் செய்யக்கூடாது. உனக்கு என்னென்ன வேண்டுமோ அவற்றையெல்லாம் கூசாமல் என்னைக் கேள். இன்னொருமுறை சொல்லுகிறேன். உன் அத்தையின் நாட்களை மறந்துவிடு. உன் தகப்பனரைப்போல் என்னைக் கருது. இன்னும் நான் அதிகமாகச் சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது!"

சாவித்திரியின் மனம் உருகிவிட்டது. தன் மாமன் இவ்வளவு சீக்கிரத்தில் இவ்வளவு நல்லவனுக, தன்பால் இவ்வளவு பரிவுள்ளவனுக மாறுவானென்று முன்பு அவள் கனவிலும் கருதவில்லை. விழிகளில் நீர்ததும்ப, இதழ்கள் அதிர, முழுப் பேதைமையுடன் தன் உள்ளத்தைக் கொட்டலாயினள் :—

"மறப்பதற்கு எனக் கொன்றுமில்லை மாமா! நீங்கள் பெரியவர்கள் என்று சற்றும் ஆலோசியாமல், என் ஆத்திரத்தில் என் புத்தியீனத்தால் பலதடவை உங்களை எதிர்த்துப் பேசியிருக்கிறேன். அதைத் தான் நீங்கள் மறந்துவிடவேண்டும். எனக்கு என்னென்ன வேண்டுமென்று கேட்டீர்கள்! சொல்லுகிறேன். இரவிக்கை தரித்துக்கொள்வதற்கும், வீணை வாசிப்பதற்கும், புத்தகங்கள் பத்திரிகைகள் வாசிப்பதற்கும், ஒவ்வொருநாளும் மாலையில் நான் சரஸ்வதி பூஜை செய்யும்போது குங்குமத்தை நெற்றியிலிட்டுக்கொள்வதற்கும் மாத்திரம் எனக்கு உத்தரவு கொடுங்கள். பிறர் பார்க்க, மதிப்பாக, கௌரவமாக, நாகரிகமாக, அழகாக விளங்கவேண்டுமென்று இவைகளை விரும்புகிறேன் என்று எண்ணுதேயுங்கள். என் நிலைமை எனக்குத் தெரியும். இந்த என் நிலைமையில், ஏன் எனக்கு அழகும் மதிப்பும்! ஆனால், இரவிக்கை இல்லாதிருப்பது என்னவோ என் மனத்திற்குப் பிடிக்கவேயில்லை. அதற்குக் காரணமும் எனக்குச் சொல்லத் தெரியவில்லை. புத்தகங்களிடத்திலும் வீணையிலும் எனக்கு நிரம்ப ஆசை. இத்தனை நாள் அவைகளைப் பாராமலிருந்தது எனக்குப் பித்துப்பிடித்ததுபோலிருக்கிறது. இனியும் நான் இப்படியேயிருந்தால் சில மாதங்களில் நான் செத்துவிடுவேன்; நிச்சயம். சோறில்லாமல் பட்டினியாற் செத்தாலும் சாகலாம். அதைவிட அதிக வதையாயிருக்கும் புத்தகப் பசியின் ஏக்கத்தால் சாவது. குங்குமமோ மங்களச் சின்னம். நானே அமங்கலி. (இதைச் சொல்லும் பொழுதே சாவித்திரி பெருமூச்செறிகிறாள்) அமங்கலிக்கு ஏன் மங்க

னச் சின்னம் என்ற கேள்வி எழக்கூடும். நான் அமங்கலியானாலும் என்றும் மங்கள சொரூபியாகிய சரஸ்வதி தேவியையே முற்றும் நம்பி அவளைத் தியானித்துப் பக்தி செலுத்தும்படி நேர்ந்திருக்கிறதே. ஆகை யால்தான் சரஸ்வதி பூஜா கைங்கரியப் பிரசாதமாகிய குங்குமத்தில் எனக்குப் பிரேமை. அதை நெற்றியிலிட்டுக்கொள்வது என்னிடத்தில் பக்தி சாந்தம் பரிசுத்தம் முதலிய தன்மைகள் பெருகச் செய்வதற்காக, சுமங்கலிபோல் நான் தோற்றவேண்டுமென்றல்ல. வீட்டு வேலைகளைப் பற்றிப் பேசினாலோ, நான் முன்போலவே சகல வேலைகளையும் செய்கி றேன். வீட்டுக் குடும்ப நிர்வாகத்திற்கு நான் என் எஜமானியாக வேண்டும்! அது நியாயமல்ல. அன்னபூரணியன்னி° சொன்னபடி யெல்லாம் நான் அடங்கி நடந்துகொள்ளுகிறேன். ஆனால் மாமா! நெல் குற்றுவது மாத்திரம் எனக்குப் பெருங்கஷ்டமாயிருக்கிறது. அதற்கு மாத்திரம் இப்பொழுதிருப்பதுபோல, கூலிப்பெண்களை எப்பொழுதும் அமர்த்திக்கொண்டால் நலம். ஆகவே, இரவிக்கை, புத்தகம், வீணை, குங்குமம், நெல் குற்றாதிருப்பது இந்த ஐந்துதான் நான் விரும்புகிறேன். வேறொன்றுமில்லை.”

“என்று என் உள்ளத்திலிருந்த விருப்பங்களில் ஒன்றைத் தவிர எல்லாவற்றையும் கூசாமல் என் மாமன் முன்பு கொட்டினேன்” என் றாள், நாகபுரத்தில் சாவித்திரி ஜனகராஜனை நோக்கி.

“ஒன்றைத் தவிர என்றாயே. அந்த ஒன்று என்ன ?” என்று வினவினன் ஜனகன். பெண்மணியின் முகம் சிவந்தது. “அப்படியா சொன்னேன் !” என்று மலைத்தாள். “ஆமாம் அப்படித்தான் சொன் னாய். என் உள்ளத்திலிருந்த விருப்பங்களில் ஒன்றைத் தவிர என்று சொன்னாய். ஒருவேளை அவசரத்தில் பிழையாகச் சொல்லிவிட்டாயோ!” என்றான் கதாநாயகன். மீண்டும் சற்றுத் தயங்கிப் பின்பு மீண்டும் பேசலாயினள் செல்வி :—

“ஆமாம். ஒன்றைத் தவிர என்ற வார்த்தை நான் அறியாமலே வெளிவந்துவிட்டது. ஆனால் அது பிழையல்ல. உண்மையில் என் விருப்பம் ஒன்றை மாத்திரம் என் மாமனுக்குச் சொல்லவில்லை. ஆனால் உங்களுக்குச் சொன்னாலென்ன! நீங்கள் பெருந்தகைமையான நோக் குடையவர்கள். என்னோடு நெடுநாள் நெருங்கிப் பழகியிருக்கிறீர்கள். என் குணம், என் இருதயத்தின் தன்மை உங்களுக்குத் தெரியும். உங் களைத் தவிர, வேறு எந்தச் சற்குணரிடத்திலும் விசாலக் கருத்துடையவ ரிடத்திலும் அந்த என் விருப்பத்தைச் சொன்னால், என் விருப்பத்தை,

என் மொழிகளை விபரீதமாக அர்த்தம் செய்வார்கள். அப்படியிருக்க, என் மாமனிடம் அதைச் சொன்னால் அவர் என்னைப்பற்றி என்ன நினைப்பார். ஆகையால்தான் அவரிடத்தில் சொ —"

"பீடிகையால் பேச்சை வளர்க்கிறாயே. சாவித்திரீ! என்னை நம்பு. உன் உள்ளத்தில் இருப்பது ஒவ்வொன்றையும் நீ எனக்குச் சொல்லலாம். நான் உன் நலத்தையே நாடுகிறவன். இத்தனை வருஷ காலமாக உன் நிலைமையைப்பற்றிக் கவனியாமலிருந்தேனென்று யோசிக்கிறாயோ! அது என் குற்றந்தான். ஐயோ! சந்தர்ப்பங்கள் அப்படி நேர்ந்தன. நான் என்னசெய்வேன். ஆனால் நான் உன்னைப்பற்றிச் சிந்தியாத நாளே கிடையாது என்னலாம். இனி, எனக்கு என்ன நேர்ந்தாலும், உன்னை அணுவளவு துன்பமும் அணுகாதிருக்கப் பார்த்துக்கொள்வேன். நீ உன் மாமனிடம் சொல்லாத உன் விருப்பம் என்ன? சொல்லு சீக்கிரம். அதை நிறைவேற்றுவதுதான் என் முதற் கவலை.

புன்னகையுடன் சாவித்திரி, "உங்களுக்கு அந்தக் கவலை வேண்டா. நமது அம்மணி நியமிக்கும் அதிசய விதிகளில் ஒன்றினால், அந்த விருப்பம் இன்றுதான் நிறைவேறிற்று. உங்களைத் தரிசிக்கவேண்டுமென்பதுதான் என் மனத்தில் இன்றுவரை பொதிந்துவைத்திருந்த விருப்பம். இதை உங்களைத் தவிர வேறு யாரிடத்திலாவது நான் சொன்னால் அவர்கள் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்?" என்றாள்.

ஒரு நங்கை நெடுநாட் பிரிந்த தன் உயிர்த் தோழியை நாடுவது போல, ஒரு ஆடவன் தன் உயிர்த் தோழனோடு அளவளாவ விரும்புவது போல, சாவித்திரியின் மனம் ஜனகராஜனது பிரிவாற்றாது களங்கமற்று அவனை நாடியது. இந்த உண்மையை, இந்தத் தன்மையை இந்நிர்ப்பாக்கிய நாட்டில் நம்புவார் யார்! இந்த விருப்பத்தால் சாவித்திரியின் மனம் மாசுபடவில்லையென்று உணரக்கூடியவர்கள் சாவித்திரி ஜனகன் என்ற இருவரே என்று எண்ணினாள் அச் சாவித்திரி. அவள் எண்ணியதற்கிசைய, ஜனகன் அவ்வாறு உணர்ந்தனனோ!

(தொடரும்.)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

மருத்துவப் பெட்டி.

நோயணுகாவிதி.

(தேரையர்.)

(வெண்டாமரை ரு, இதழ் உ, 30-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆறுதிங்கட் கொருதடவை வமனமருந் தயில்வோம்
அடர்நான்கு மதிக்கொருகாற் பேதியுறை நுகர்வோம்
தேறுமதி யொன்றரைக்கோர் தரநசியம் பெறுவோம்
திங்களரைக் கிரண்டுதரஞ் சவளவிருப் புறுவோம்
வீறுசதுர் நாட்கொருகால் நெய்முழுக்கைத் தவிரோம்
விழிகளுக்கஞ் சனமூன்று நாட்கொருகா லிடுவோம்
நாறுகந்தம் புட்பமிவை நடுநிசியில் முகரோம்
நமனூர்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே.

இ-ள். ஆறுமாதத்திற் கொருதரம் வாந்தியாகும்படி மருந்துண்போம். நான்குமாதத்திற் கொருதரம் பேதிக்குமருந்து கொள்வோம். ஒன்றரைமாதத்திற் கொருதரம் நசியம்செய்துகொள்வோம். மாதத்திற்கு நாலுதரம் சௌளம்செய்வித்துக்கொள்வோம். நான்கு தினத்துக் கொருதரம் எண்ணெயிட்டு மூழ்குதலைத் தவிர்க்கமாட்டோம். மூன்று நாட்களுக் கொருதரம் கண்களுக்கு மையிடுவோம். கஸ்தூரி முதலிய வாசனைப்பொருளையும் புட்பங்களையும் நடுராத்திரியில் முகரமாட்டோம். ஆதலின், நோயை முன்னிட்டுவரும் யமனுக்கு நம்மிடத்தில் என்ன வேலையிருக்கிறது, ஒன்றுமில்லை யென்க.

பகத்தொழுக்கு மாதரயங் கரந்துடைப்ப மிவைத்தூள்
படநெருங்கோந் தீபமைந்தர் மரநிழலில் வசியோம்
சுகப்புணர்ச்சி யசனபச னத்தருணஞ் செய்யோம்
துஞ்சநுண விருமலஞ்சை யோகமழுக் காடை
வகுப்பெடுக்கிற் சிந்துகச மிவைமாலை விடுப்போம்
வற்சலந்தெய் வம்பிதுர்சற் குருவைவிடமாட்டோம்
நகச்சலரு ந் சிகைச்சலமுந் தெறிக்குமிட மணுகோம்
நமனூர்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே.

இ-ள். தூரஸ்திரீ நடக்கும்போது பறக்குந் தூசியும், குதிரை, கழுதை, துடைப்பம் இவற்றாலுண்டாகும் துகளும் மேற்படும்படி நெருங்கோம். இரவில் தீபத்தினிழல், மனிதர்நிழல், மரநிழல் இவைகளில் தங்

கோம். போசனம் சீரணிக்குங்காலத்தில் புணர்ச்சிசெய்யோம். நித்திரை, போசனம், மலசலம், புணர்ச்சி, அழுக்கு வஸ்திரம், சீப்பிட்டுச் சீவும்போது சிந்துகின்ற ரோமம் ஆகிய இவைகளை மாலைக்காலத்தில் நீக்குவோம். கன்றோடுகூடிய பசுவையும், தெய்வத்தையும், பிதுர்க்களையும், ஆசிரியரையும் பூசிப்போம். நகச்சலமும் சிகைச்சலமும் தெறிக்குமிடத்தில் நெருங்கோம். ஆதலின், நோயை முன்னிட்டுவரும் யமனுக்கு நம்மிடத்தி லென்னவேலையிருக்கிறது, ஒன்றுமில்லை யென்க.

ஓர் மருத்துவன்.

பதினெண் கீழ்க்கணக்கு.

(வெண்டாமரை ௪, இதழ் ௧௦, 207-ம் பக்கத் தொடர்ச்சி.)

இற்றைக்கு ௩௨௦௦ யாண்டுகட்கு முன்னர்க் கடல்கொண்டு போந்த கவாடபுரத்து இருந்து தப்பிவந்த பாண்டியன் முடத்திருமாறன், கடைச்சங்கம் தோற்றுவித்துத் தமிழை வளர்த்தானாகலினாலும், அவன் இடைச்சங்கநூல்கள் உணர்ந்திருந்தானாகையினாலும், அந்நூல்களுள் பல கடைச்சங்கத்துத் தலைமைக்காலத்துப் பயின்றுவந்தன. அக்கடைச்சங்கம் நடக்கும்போது இடையிடை வெப்புநோய், குரு, வறம், புத்தர், அமணர் முதலிய இடர்களினால் நின்று நின்று நடந்ததினால் அதனுள் விளங்கிய பல புலவர்களினால் அருளிச் செய்யப்பட்ட பல நூல் அப்போழ்தைக்கப் போழ்து வழங்குவ தருமையாய் அருகினவாயின. ௪௩௦௦ யாண்டுகட்கு முன்னர், புத்தர் தமிழ்நாட்டிற் புகுந்து தமிழரசர்களைத் தம்வயப்படுத்தித் தம்சமயத்தினை நிலைப்படுத்த வெண்ணியபோழ்து, அறிவர்குலத்துப் பிறந்தாரும் ஆமாத்தியருமாகிய தெய்வதத்தன்மை வாய்ந்த வாதவூரடிகள் தோன்றி, அப்புத்தவிருள் ஓடத் தமிழச்சமயம் நிலைப்படுத்துவாராயினர். பின்னரும் பன்னூற்றுண்டுகள் கழிய, அமண் புத்தம் இரண்டும் வாதவூரடிகள் காலத்து ஒழிந்தன மறுபடியும் தலையெடுத்துவர, அப்போழ்து தமிழப்பார்ப்பனக்குலத்துப் பிறந்தாரும் முருகவேளார் அமிசருமாய ஞானசம்பந்தப் பெருமானும், தமிழ வேளாளர்குலத்துப் பிறந்தாராகிய திருநாவுக்கரசரும் தோன்றி, அப் புத்த வமண விருள்களையகற்றுவாராயினர். இஃதன்றி இன்னும் பல விடர்கள் தமிழ்நாட்டிற்கு உண்டாயபடியினால், கடைச்சங்கத்துத் தோன்றிய பன்னூல்களும் அகப்படுவ தருமையாயின. அதனைத் தேடுவாரும் இல்லை. நூல்களைத் தேடி அச்சிடுவதற்கும், கல்விக் குறைபாட்டினால் பொருளாளர்க்கு முயற்சி

உண்டாகவில்லை. மேற்சொல்லிய பல்பொருட்டுக்களினால் பல நூல்கள் வெளிவாராது மங்கின, மங்குகின்றன. இப்போது கிடைத்த நூல்களாலும், கல்வெட்டுகளினாலும், தமிழ்மொழியினின்று வழக்கின்மொழியுள் மொழிபெயர்த்த நூல்களினாலும் ஆயப்புகுமிடத்து, தமிழ ஒழுக்க வழக்கங்கட்கும், ஆரியநூல் வழக்குகட்கும் வேற்றுமைகள் பல உள்ளன. நிற்க.

பதினெண் கீழ்க்கணக்கு என்னும் வழக்கு, கடைச்சங்கத்துக் கடைசிப்போழ்தமாகிய உக்கிரப்பெருவழுதியார் காலத்து வழங்கினதாக யாதொரு ஆதாரவும் புலப்படவில்லை. ஆயினும் அறநூல் என்கின்ற வகையில் ஒருசார் தொகுக்கப்பட்டிருந்தனவாகக் குறித்தறியப்படுகின்றது. உரையாசிரியர்கள் அம்மை என்கின்ற இலக்கணத்தே சேர்த்துக் கூறுகின்றனர். பிற்காலத்துத் தொகுத்த பன்னிருபாட்டியலுள் கூறுகின்ற கீழ்க்கணக்கு என்பதே தற்போது வழங்கும் வழக்கு என்க.

அவைகளுள் நாலடியார் என்னும் அறநூல், அறம், பொருள், இன்பம் முதலிய சுருங்கச்சொல்லல் என்னுமழகு அமையப்பெற்றது. நோக்கரும் வீடு நுவற்சிசெல்லாமையின் என்றமையின், வீடு இலக்கண வகையாற் கூறார். அதனை விரிக்கில் பெருகும். ஆயினும் தமிழர் மும்முதற்பொருள்கள் நிலையின்மை என்பதுகொண்டு, அவற்றின் பற்றற்றுத் துறந்து கந்தழிச்செல்வமாய முத்திநிலை பெறுதலைப் புறப்பொருளின் மாட்டும், இறைவனது மெய்ந்நூல்களின்மாட்டும் புனைந்துரையாற் கூறுவர் ஆகலின், அதனைத் துறவென்ற அறத்துப் பாலுள் கூறுவர். ஆரியர் பதினெண்ணறநூல்களையும், தமிழவறநூல்களையும் பகுத்து விளக்கிக் காட்டத் தற்போது கூடாமையின், பின்னர் ஒருபோழ்து விளக்கிக் காட்டுவோம்.

நாலடியார் தமிழர்நூலாகும். அதனை அமணர்நூலென்றும், ஆற்றிலிட்ட ஏடுகள் எதிர்ந்துவந்தனவற்றுள் வரைந்திருந்த பாக்களே நாலடியார் என்றும் பிற்காலத்து வழக்கில் வழங்கப்பட்டுவருகின்றது. அதற்கு யாதொரு ஆதாரமும் இல்லையாதலின் அதனை ஒப்புக்கொள்ள இடமில்லை. ௨000 யாண்டு சங்கமிருந்த புலவர்கள் பல்லோரும் தமிழரே என்பதற்கு, அவர்களால் பாடப்பெற்ற பாக்களும் அவர் பெயருமே சான்று பகரும் என்க. அவைகளை எட்டுத்தொகை முதலியன பயின்றோர் அறிவார். அந் நாலடியாரில் பல்லிடங்களுள் பாண்டியனையும், சில்லிடத்து மும்மன்னர்களையும் குறித்துப் பேசியிருக்கின்றது. மும்மன்னரை முத்தரையர் என்று கூறுவர். அதனை முத்தரையர் கோவையால்

உணர்க. அதனை உணரார், முத்தரையரை, தற்போது நம் நாட்டில் குடியேறிய வடுகருள் ஒருவகுப்பினைக் குறிக்கு முத்திரியரெனச் சொல்வர். அஃது பல்வகையாலும் பொருந்தாது. கண்மூன் றுடையானை அந்நூல் காமத்துப்பாலுள் கூறுவதினாலும் அந்நூலாசிரியர் அருகரல்லர் என்பார்க்கு, சிலர், அருகமதம் அநேகாந்தமத மாதலின், சிந்தாமணி முதலிய நூல்களுள் சிவபிரானைக் குறித்தமாதிரி குறிக்கின்றார் என்று மயங்குவாருமுளர். அஃது சினமின்மை என்னு மதிகாரத்துள் "கல்லெறிந் தன்ன கயவர்" என்னும் பாட்டினுள், "இடுநீற்றாற் பையவிந்த நாகம் போற் றத்தங் குடிமையான் வாதிக்கப்பட்டு" என்பதனை ஓர்ந்து பார்க்குமிடத்து விளங்கும். திருநீறிட்டாரைக் காணில், கண்டுமுட்டு என்று கூறின அமணரா இடுநீற்றால் பையவிந்தநாகம் என்று கூறுவர்? நூல்களை தனித்து நோக்காது தலைப்பாட்டுகளையும் இடையிடையே சொருகிய உரையின் சூழ்ச்சிகளையும்கொண்டு ஆராய்வது இடரினை யுண்டாக்கும். தமிழ அறநூல்கள் உலகத்து எல்லா மக்கட்கும் பொதுவான் நிகழும் அறமே புகலுமாகலான் அவற்றினிடையில் சில சொருகினும் அவை வெளிப்படையாய் விளங்கிவிடும் என்க. பதுமனார் என்பார் அந்நானூறு பாக்களையும்பால் வகுத்து அதிகாரப்படுத்து உரையெழுதினர். எழுதின முகத்தால் கடவுள் வாழ்த்துப்பா வொன்றினைத் தலையிற் சொருகிவைத்தார். அதனால் அஃது அமணநூலாகுமா? இம்மாதிரியே ஆசிரியர் தெரியாப் பழமொழியினுள்ளும் முன்றுறையார் எனபவர் முதல் கடவுள் வாழ்த்துக் கூறி மயங்கினர் என்க.

அமணர்கள் நூல்கள் புனையவும் சொருகவுந் தொடங்கியகாலம் மிகவும் பிற்பட்டகாலம். அஃது ஆயிரம் யாண்டுகட்கு உள்ளாகத்தான் இருக்கும். கடைச்சங்கக்காலத்திற்குப் பிற்பட்டு, பல் காப்பியம், பல் காயம், சிறுகாக்கைப்பாடினியம், நற்றத்தம், மயேச்சுரயாப்பு, இ[illegible]ந்திரையம் முதலிய சின்னூல்களும், கலைக்கோட்டுத்தண்டு, சேந்தன்திவாகரம், பிங்கலம், கயாகரம், பொதியநிகண்டு முதலிய நிகண்டுகளும் இருந்தும், வீரசோழியம், நன்னூல், நம்பி அகப்பொருள், சூடாமணிநிகண்டு, யாப்பருங்கலம் முதலிய நூல்களெல்லாம் மேற்கூறிய நூல்களை யொழிப்பதற்கே தோன்றியனவன்றி, அந் நூல்களில் கூறிய இலக்கணங்களினும் சிறந்த இலக்கணங்களைக் கூறவந்ததாகத் தெரியவில்லை. அவ்வாற்றனும் அவற்றிற்கில்லையென்க.

நாலடியார் தமிழச்சமயம் தழுவிய நூல் என்பதற்குச் சான்றாக, தமிழர்களுள்ளே ஆடவருக்கும் பெண்டிர்களுக்கும் பொதுமையாக அறங் கூறல் இயல்பாதலின், அவ் வறம் காண்டலுக்குக் கல்வி முதற்கா

ரணமாதலினாலே, அவையிற்றினை இருபாலார்க்கும் பொருத்துமிடத்து, கல்வியால் ஆடவரினும் மகளிரே அற முதலியன வறிந்து தக்க கணவர்களைத் தருமுறையால்கொண்டு அன்னார்க்குப் பல ஒழுகலாற்றானும் இல்லறம் நிகழ்த்துவாராகலின், அஃது பொதுமையும் சிறப்புமாமாறு, "குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும், மஞ்சளழகு மழகல்ல, நெஞ்சத்து, நல்லம் யாமென்னு நடுவு நிலைமையாற் கல்வி யழகே யழகு." என்று குறிப்பிக்கின்றார். இதனை ஆராயுமிடத்து, அகத்தியனார் மாணாக்கருள் காக்கைப்பாடினியாரும், கடைச்சங்கத்துப் பதிற்றுப்பத்துள் ஒரு பஃது பாடிய காக்கைப்பாடினியார் நச்செள்ளையாரும், கரிகாற் பெருவளத்தான் மகளார் ஆய ஆதிமந்தியாரும், பூதபாண்டியன் மனைவியார் பெருங்கோப் பெண்டும், இன்னும் பேய்மகள், எழுனி, வருமுலையாரித்தி, வெள்ளிவீதி முதலிய பெண்பாலர்களும் எத்துணையோ பேர்கள் சங்கப் புலவராயும் பாடியும் கீர்த்திபெற்றிருக்கின்றார்கள் என்க. இருபாலார்க்கும் ஒத்த கல்வி முதலியன பத்தும் பொருந்த இருவரும் மனத்தாற் பொருந்திச் சேர்தலே தமிழ்வழமாகிய களவென்னும் ஒழுக்க மணமென்பது அகத்தியம், தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், அவிநயம், மாபுராணம், இளந்திரையம் என்கின்ற பன்னூல்களானும் தெள்ளிதின் விளங்குமென்க.

திரு. சுப்பிரமணியதேசிகர்,
காஞ்சீபுரம்.

புதுவயல் லலிதா விலாஸ் ரீடிங் ரூம் அன்ட் பாட்மின்டன் கிளப் முதலாவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டம்.

எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் இவ் வாசகசாலையின் முதல் வருஷ நிறைவு விழாக் கொண்டாட்டம், நிகழும் பிங்கள ௵ சித்திரை ௴ ௧-ம் ௳ ௨-ம் ௳ இவ்விரு தினங்களிலும் வித்தியாபாநு பத்திராதிபரும் கம்பராமாயணப் பிரசாரகருமாகிய காரைக்குடி பிரம்மஸ்ரீ M. V. கோவிந்தராஜய்யங்காரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நன்கு நடைபெற்றது.

௧-ம் ௳ (13-4-17) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நகரத்தார்கள் தலைவரவர்களை ஞானப்பிரகாச கலாசாலையினின்றும்

மங்கள வாத்திய கோஷத்துடன் சபாமண்டபத்திற் கழைத்துவந்ததும், ஞா. பி. கலாசாலை மாணவர்களால் கடவுள் வாழ்த்துக் கூறப்பட்டது. பின்னர் இவ் வாசகசாலையின் அக்கிராசனாதிபதி ஸ்ரீமாந் அ. பசி. மு. சின்னையாசெட்டியா ரவர்களால் அக்கிராசனத் தமரும்படி பிரேரேபிக்கப்பெற்றுச் சபையோர்களால் ஆமோதிக்கப்பட்டது. சபாநாயகரவர்கள் அக்கிராசனத் தமர்ந்ததும், இனிய மொழிகளால் முன்னுரை கூறினார்கள். பின்னர், காரியதரிசி ஸ்ரீமாந் அரு. உ. அருணாசலம்செட்டியா ரவர்களால் அறிக்கைப்பத்திரம் படிக்கப்பட்டது. அதன்பின் பிரம்மஸ்ரீ காட்டுப்புத்தூர் - கிருஷ்ணசாஸ்திரியா ரவர்கள் "வாசகசாலை" என்பதுபற்றியும், ஸ்வதேசமித்திரன் ரிப்போர்ட்டர், R. இராஜகோபாலறாவ் அவர்கள் "பத்திரிகையும் அதன் பிரயோசனமும்" என்பதுபற்றியும், ஸ்ரீமாந் சுபி. ராம. சொக்கலிங்கம்செட்டியா ரவர்கள் "ஒற்றுமை" என்பதுபற்றியும், ஞா. பி. கலாசாலை ஆங்கில ஆசிரியர் பிரம்மஸ்ரீ மீனாக்ஷிசுந்தரமய்ய ரவர்கள் "தேகப்பயிற்சி" என்பதுபற்றியும், கேட்டோர் யாவரும் பேருவகை அடையும் வண்ணம் நன்கு உபந்யசித்து முடிந்ததும், சபாநாயகர் மிக இனிமையாகவும் விரிவாகவும் முடிவுரை கூறினார்கள். பின்னர் வாசகசாலையின் தலைவர் ஸ்ரீமாந் சின்னையாசெட்டியார் அவர்கள் அக்கிராசனாதிபதி அவர்கட்கும், உபந்யாசகர்கட்கும், சபைக்கு விஜயம் செய்திருந்த பிரமுகர்கட்கும் நன்றியறிந்த வந்தனம் கூற, ஹார சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பட்டு 5 மணிக்குச் சபை பூர்த்தி அடைந்தது. 5–10 மணிக்கு நவீனமுறையில் ஏற்படுத்தப்பட்டிருந்த தேநீர்ப்பானக் கச்சேரி (Tea Party) நன்கு நடந்தேறியது. அதற்குச் சுமார் 400 ஜனங்கள்வரை விஜயம்செய்து சிற்றுண்டியருந்திய பின்னர், புஷ்ப சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்றன. அதன் பின்னர், பந்து விளையாடல் (Badminton) நடைபெற்றது. இரவு 9 மணிமுதல் 2 மணிவரை ஜலதாங்கக் கச்சேரி நிகழ்ந்தது. 2-ம் ௳ (14-4-17) காலை 9 மணிக்கு விகடக் கச்சேரியும் மாலை 3 மணிமுதல் இரவு 8 மணிவரை துஞ்சரபாகவதர் அவர்கள் இராஜ மோஹினி என்னும் சரித்திரத்தைச் சபையோர்கள் ஆனந்திக்கும்வண்ணம் மிகவும் அழகாகக் காலக்ஷேபம் செய்தார்கள். இத்துடன் அக் கொண்டாட்டமானது மங்களகரத்துடன் நிறைவேறியது.

இவ் வாசகசாலை நன்கிலங்குமாறு எல்லா வுயிர்க்கும் ஏக பராபரமாய் நிற்கும் இறைவன் திருவருள் பாலிப்பாராக.

கண்டு மகிழ்ந்தோன்.

படிக்காசுப்புலவர் சரிதம்.

காப்பு.

நேரிசை வெண்பா.

"சந்த முறும்படிக்கா சுப்புலவன் சற்சரிதை
சந்த முறவெழுதிச் சாற்றுதற்குத் — தந்திமுகன்
பூங்கமலப் பாதம் புகழ்சேர் துணையென்றே
ஆங்கமல நெஞ்சே யறி."

இற்றைக்குச் சுமார் ஆயிரவருடங்கட்குமுன், யாவரும் பரவும் மேவருஞ் சிறப்புடைய நந்தமிழகத்தில் உயர்குணம், ஒழுக்க நலம், கல்வி, வாய்மை, நடுவுநிலைமை முதலிய உத்தமகுணங்களாற் சிறந்து அரிய தம் புலமை மிகுதியால் தமிழரசர் சபைகளில் பலர் புகழ வீற்றிருந்த ஔவையார், பொய்யாமொழி, ஒட்டக்கூத்தர், கம்பர், புகழேந்தி முதலிய அரும்பெரும் புலவர் குழாங்களைப்போல, இப்பொழுதைக்கு ஐந்நூறு வருடங்கட்குப் பிற்பட்டகாலத்தும், மேற்கூறியவர் அமிசங்களில் சில பொருந்திய புலவர் கூட்டத்தார் இல்லாமற்போகவில்லை. தமிழ் வேந்தர் மூவர் வாழ்வு நிலை குலையவும், தமிழை நன்கு மதிப்பாரும், ஆதரிப்பாருமாகிய வள்ளல்களும், பிரபுக்களும், நாளுக்குநாள் குறைவுபடவும் நேர்ந்ததால், தமிழைப் பாராட்டுவாரும், அதனைக் கற்பாரும் மிகச் சிலராய் நின்றதே தமிழ் தழைத்தோங்க வகையில்லா தொழிந்ததற்குக் காரணம் எனலாம். எனினும், தமிழ்ச் சுவை நலமுணர்ந்த சிற்சில பிரபுக்களும், சிற்றரசரும், அபிமானிகளும் ஆங்காங்குத் தோன்றிப் புலவர்களை அபிமானித்தும் ஆதரித்தும் வந்ததால் தமிழ் கற்றாரும் சிறிதே தலைகாட்டத் தொடங்கினர். அவர்களில், இங்குக் கூறப் புகும் படிக்காசுப் புலவரும் ஒருவர். "பண்பாகப் பகர்சந்தம் படிக்காசலாதொருவர் பகரொணாதே" எனச் சர்வாங்கீகாரமாகப் புலவர்களால் இன்றளவும் கொண்டாடப்படுவதே, இவர் கல்வியிற் சிறந்து சந்தம் பாடுதலில் வல்லவரென்பதற்குப் போதிய சான்றாகும். அதிலும் இவர் பாடலுக்கு, "பாங்குடைத் தொண்டர்கள் பணிந்துய்யும் தேங்குநீர் வயல்சூழ் தில்லைக்கூத்தனே" மனமுவந்து பஞ்சாக்ஷரப் படியிசைப் பொற்காசுவைத்தருளிச் சிறப்பித்தனன் என்றால், இவர் கசடறக் கற்று அதற்குத் தக்கவாறு நிற்கக் கற்றவரென்பதற்குச் சந்தேகமுண்டோ? இத்தகைய தமிழ்ச் செல்வர், "தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்று சிறப்பித்தோதப்பெற்ற தொண்டைமண்டலத்தில்

செங்கற்பட்டுக்குச் சமீபத்தில் பொன்விளைந்தகளத்தூரில் நவவீரர் வழிவந்த செங்குந்தர் மரபினில் அவதரித்தனரென்ப.

இவர் இவ்வூரினரென்பது, "மட்டாருந் தென்களந்தைப் படிக்காசன்," "மட்டுலவு சோலைக் களந்தைப் படிக்காசு," "விஞ்சையர்கள் தம்பிரான் களந்தைப் படிக்காசு," "நிமிர்களந்தை வருபேருரான்" என்பவற்றாலும், செங்குந்த மரபினரென்பது,

"புகழ்பூத் திடுந்தில்லை மேலோனை யம்மையைப் போற்றியெங்கு
மிகழ்பூத் திடாதபொற் காசைப்பஞ் சாக்கரத் தின்படிமே
னிகழ்பூத்தல் பெற்றுப்புள் வேளூர்க் கலம்பக நீட்டியருத்
திகழ்பூத்து நின்ற செயலோர்செங் குந்த சிலாக்கியரே."

என வரும் செங்குந்த சிலாக்கியர்மாலைச் செய்யுளாலும் அறியப்படுகிறது.

கமலாலயமென்னும் திருவாரூரில் தோன்றியவரும், வடமொழி தென்மொழிகளில் வல்ல வித்வ சிகாமணியும், கி. பி. 1705-ல் பிரசித்தி பெற்றிருந்த திருவாவடுதுறை ஆதீனத்து ஈசானமடம் ஸ்ரீ சுவாமிநாத தேசிகர் முதலிய நல்லோர்களால் நன்கு பாராட்டப்பட்டுத் தமது நூல்களிலும் புகழ்ந்து கூறப்பெற்ற பெரு நாவலருமாகிய இலக்கண விளக்கம் ஸ்ரீமத் வைத்தியநாததேசிகரைத் தமக்கு ஆசிரியராகக்கொண்டு முறைப்படி தமிழ்க்கலை முழுதும் பயின்று தெய்விகம் விளங்கிய நல்வாக்கினைப் பெற்று இல்லற வாழ்க்கையிற் சிறந்து விளங்கினர். இவர், வைத்தியநாததேசிகர் தமது ஆசிரியரென்பதை,

"கூடுஞ் சபையிற் கவிவார ணங்களைக் கோளரிபோற்
சாடுஞ் சதாசிவ சற்குரு வேமுன்னுன் றந்தைதம்மாற்
பாடும் புலவர்க ளானுமின் றிச்செம்மற் பட்டியொழுங்குங்
காடுஞ் செடியுமென் னுதமிழ்க் காரிகை கற்றதுவே."

(இலக்கண விளக்க முகவுரை.)

எனத் தாமே பாடிய செய்யுளால் அறிக.

இவர் ஜனனந்தொடங்கி இல்லற மடைந்தவரையும் நடந்த விசேட வரலாறுக ளொன்றும் தெரிந்துகொள்ளப் போதிய சாதனங் காணப்படவில்லை.

இவர், களந்தையில் இருந்தபோது, அவ்வூருக் கணித்தாயுள்ள தென்மாவை என்னும் மாவண்டூரில் கல்வி, செல்வம், கொடை, சீலம் முதலிய உத்தமகுணங்களால் சிறந்த கத்தூரிமுதலியார் என்னும் சீமானின் சிறந்த தவப் புதல்வராகிய கறுப்பண்ணமுதலியாரென்னும் கன்

ணியர், தொண்டைமண்டலத்திலுள்ள அரசர், வள்ளல், பிரபுக்கள், புலவர் முதலியோரின் பெருமைகளைத் தொகுத்து ஓர் நூலாகச் செய்து தரும்படி கேட்ப, புலவரும் அங்ஙனமே, 100 செய்யுள் கொண்ட தொகையில் கட்டளைக் கலித்துறைப்பா வினத்தில், அழகிய செய்யுள் வடிவில் சுருக்கச் சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க் கினிமை, நன்மொழிபுணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல் என்னும் பத்தழகும் பொருந்த முடித்துப் பிரபுவுக்குக் காட்டினர். பிரபு நன்றெனக்கொண்டு மாவண்டூரில் ஓர் சபை கூட்டி அதனை அரங்கேற்றுமாறு செய்து, புலவர் அருமை பெருமைக்கும் செய்யுளமைப்புக்கும் அளவிலா ஆனந்தங்கொண்டு அதற்கேற்றவாறு அப் புலவரைச் சிவிகைமீதேற்றித் தாமும் தமது சகோதரருமாகச் சிவிகை சுமந்து ஊர்வலஞ்செய்வித்துப் பொன்னாலும், பூஷணத்தாலும் சன்மானஞ்செய்வித்துச் சிறப்பித்தனரென்ப. இவ் விஷயம் அடியில் வருஞ் செய்யுட்களா லுணர்க.

"கன்மாரி காத்தமுகிற் கத்தூரி யருண்மாவைக் கறுப்ப னென்னு
மின்மாரி தனதுகிளை யத்தனையுஞ் சபைகூட்டி வியந்து கேட்டுச்
சொன்மாரி பொழிந்திடவே சிரகரகம் பிதஞ்செய்து சுருளுந் தந்து
பொன்மாரிபொழிந்துதந்தப்பல்லக்குச்சுமந்ததனாற் புகழ்பெற்றானே."

"சூடுந் திரைகொண் டிவன்வேளை பார்த்துக் குறுகலர்கள்
தேடுந்தென் மாவைக் கறுப்பனெங் கோனெஞ் சிவிகைதனைப்
பாடுந் தமிழ்ப்பெரு மானொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனைப் போலச் சுமந்தனனே."

"காவைவென் றிடுகத் தூரி கண்மணிக் கறுப்ப னென்னு
மாவைய்யம் பதியான் றொண்டை மண்டல சதகங் கேட்டு
நூவலர் புகழ்ந்து மெச்ச நவநிதி பொழிந்து நன்றாய்ப்
பூவுல கெங்கும் போற்றப் புகழ்நிலை நிறுத்தி னானே."

"எல்லப்ப னம்மையப்பன் றருதிருவேங் கடநாத னெழிற்சிராமன்
வல்லக்கொண் டையன்மாதை*வேங்கடே சுரன்போ லவரிசைசெய்தான்
செல்வத்தம் பியருடனே கத்தூரி மகன்கறுப்பன் றெருவீதிக்கே
பல்லக்குத் தான்சுமந்தா னதுநமக்கோ ராயிரம்பொன் பரிசுதானே."

---

* வேங்கடேசுரன் என்பவர், மாதை என்னும் திருவாமாத்தூரில் அந்தணர் வருணத்தில் ஸ்மார்த்த வகுப்பிற் பிறந்தவர். அறிவு, ஒழுக்கம், கல்வி, முதலியவற்றாற் சிறந்து, கி. பி. 1682-ல் மதுரையை ஆட்சிபுரிந்த ரங்ககிருஷ்ணமுத்து வீரப்பநாய்க்கருக்கு மந்திரியாகத் திரு

"இந்தச் சதக மரக்கேற்று கைக்கிசைந் தேனெவரும்
வந்திக்கு மாவைக்கத் தூரிக் கறுப்பன் வளமைபெறு
புந்திக் குலாவுநன் னாதர்தம் பாதம் பொருந்துமன்பன்
வந்துற் பவிக்க மகிழ்வா னதுந்தொண்டை மண்டலமே."

இங்ஙனம் தம்மைப் பெருமைப்படச் சிறப்பித்து உபசரித்த கறுப்ப முதலியாரின் அரும்பெருங் குணத்திற் கதிசயித்த இவர் அப் பிரபுவைக் குறித்து,

"ஓர்கறுப்பு மில்லாத தொண்டைவள நன்னாட்டி லுசிதவேளைச்
சீர்கறுப்பொன் றில்லாத கத்தூரி மன்னனருள் சேயைப்பார்மே
லார்கறுப்ப னென்றுசொல்லி யழைத்தாலு நாமவனை யன்பினாலே[மே."
பேர்கறுப்ப னிறஞ்சிவப்பின் கீர்த்தியினால் வெளுப்பனெனப் பேசுவோ

என்னுஞ் செய்யுளால் புகழ்ந்தனர்.

(தொடரும்.)

சி. கு. நாராயணசாமி முதலியார்,

கோயமுத்தூர்.

காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாத சுவாமி மகோற்சவ உபன்னியாசங்கள்.

தொண்டைநாட்டுத் தலைநகரமாகிய இக் காஞ்சியம்பதியின்கண் சிவபெருமான் அடியார்க் கருள்செய்வான் கருணைத் திருமேனிகொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஏகாம்பரநாதருக்கு நடைபெறும் மகோற்சவத்தில் உபன்னியாசம் நடைபெறும்படி ஏற்பாடுசெய்தவண்ணம் 2வருடங்களாக அரிய பெரிய மகோபன்னியாசங்கள் நடைபெற்று வருகின்றன. அதன்படி சென்ற அநல வருடத்தில் நடைபெற்ற மகோற்சவத்திலும் கீழ்க்கண்டபடி உபன்னியாசங்கள் நடைபெற்றன.

அநல ௵ பங்குனி ௴ 14 (27-3-17) மங்களவாரம் மாலை 4 மணிக்கு ஸ்ரீமான் சேநூனுசல பாரதி அவர்கள் "வேதாந்த விருதயம்

நெல்வேலியை ஆண்டவர். புலவர்க்குப் பெருநிதியாய் விளங்கியவர். பணவிடுதூது முதலிய பிரபந்தங்களாற் சிறப்பிக்கப்பெற்றவர். தமது ஆசிரியர் கட்டளைப்படி பிரபோத சந்திரோதய முதலிய நூல்களியற்றி உலகுக் குதவியவர். படிக்காசுப்புலவராலும் தமது கொடைத்திறமையைப் புகழ்ந்து பாடப்பெற்றவரும் இவரே.

சித்தாந்தம்" என்னும் விடயத்தை மிகத் தெளிவாக விளக்கினார்கள். 28 - 3 - 17 புதவாரம் மாலை 4 மணிக்கு, காவித்தண்டலம் ஸ்ரீமான் வேதாசல முதலியார் அவர்கள் "சேக்கிழார் கவிநயம்" என்றெடுத்துக் கொண்டு பெரியபுராணத்தின்கண்ணுள்ள பாசுரங்களின் அருமைகளையெல்லாம் கரதலாமலகமாகக் காட்டினார். 30 - 3 - 17• சுக்கிரவாரம் மாலை 4 மணிக்கு, "சைவ வியாபகம்" என்னும் விடயத்தைப் பீடிகையாகக்கொண்டு வடமொழி தென்மொழியாகிய இருமொழியிலிருந்து அநேக மேற்கோள்களைக் காட்டி, கேட்டவர் மனங்களிக்க உபன்னியசித்தார். 31 - 3 - 17 சனிவாரம் ஸ்ரீமான் பொன்மார் - நடேச முதலியார் அவர்கள் "சமய குரவர் சரித்திர ஆராய்ச்சி" என்னும் விடயத்தை எடுத்துக்கொண்டு, சமயாசாரியர் நால்வர், பரவையார், சங்கிலியார் ஆகியவர்களின் சரித்திரங்களைக்கூறி, இவ்வறுவரும் அயோனிஜர்களென்று பெரிய புராணத்தை ஆதாரமாகக்கொண்டு பல மேற்கோள்களுடன் உபன்னியசித்தார்.

1 - 4 - 17 ஆதிவாரம் மாலை 4 மணிக்கு ஸ்ரீமான் சோணாசல பாரதியார் அவர்கள் "சைவசித்தாந்தம்" என்னும் விடயத்தை மிக அருமையாக உபன்னியசித்தார்.

4 - 4 - 17 புதவாரம் மாலை 4 மணிக்கு, ஸ்ரீமத் ஞானியார் மாணவர்கழகம் ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமிப்பிள்ளை அவகர்ள் "குரு பக்தி" என்னும் விடயத்தை எடுத்துக்கொண்டு பல அரியவிடயங்களையும் பல சரித்திரங்களையும் குருவினிடத்துச் சீடன் இருக்கவேண்டிய மாதிரியையும் மிக விளக்கமாகவும் பக்தி நயம் பெருகவும் உபன்னியசித்தார். 6 - 4 - 17 சுக்கிரவாரம் மாலை 4 மணிக்கு, ஸ்ரீமத் ஞானியார் மாணவர் கழகம் ஸ்ரீமான் பாலசுந்தரநாயனார் அவர்கள் "காமாட்சி கலியாணம்" என்னும் விடயத்தைக் காஞ்சிப்புராணத்திலிருந்து திரட்டி உபன்னியசித்தது மிக அழகாக இருந்ததோடு இவரது இனிய மொழியும் இசையோடு கூடிய வசனிப்பும் வார்த்தைகளைப் பிரயோகிக்கும் மாதிரியும் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் மடத்துச் சுவாமிகளையே யொத்திருந்தது. 7 - 4 - 17 சனிவாரம் மாலை 4 மணிக்கு, ஸ்ரீமத் ஞானியார் மாணவர்கழகம் காஞ்சிபுரம் ஸ்ரீமான் பி. சே. முருகேச முதலியார் அவர்கள் ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் சரித்திரத்தையும், ஸ்ரீமத் ஞானியார் மாணவர்கழகம் ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமிப்பிள்ளை அவர்கள் "கருணை" என்னும் விடயத்தையும், ஸ்ரீமத் ஞானியார் மாணவர் கழகம் ஸ்ரீமான் பாலசுந்தரநாயனார் அவர்கள் "ஸ்ரீ ஞானசம்பந்தப்பெருமானது நற்கருணை" என்பதையும் எடுத்துக்கொண்டு மிக வுருக்கமாகவும்,

பக்தி ரசம் உண்டாகவும் உபன்னியசித்தார்கள். 8-4-17 ஆதிவாரம் மாலை 4 மணிக்கு ஞானியார் மாணவர் கழகம் ஸ்ரீமான் பாலசுந்தர நாயனுர் அவர்கள், கந்தபுராணத்தின்படி பார்வதி கலியாணத்தையும், ஸ்ரீமான் சோணசல பாரதியார் அவர்கள் "மாவடி மான்மியம்" என்பதையும் மிக இனிமையாக உபன்னியசித்தார்கள். இவ் வுபன்னியாசங்கள் நடைபெற்று வருகின்ற காலங்களில், தெய்வ சங்கற்பத்தால் நேரிட்ட அசந்தர்ப்பத்தால் வரக்கூடாமற்போன மற்றைய வித்துவான்களுடைய விடயங்களை நினைத்தகாலத்தில் முட்டின்றி முடிப்பதற்குச் சித்தமாக விருந்து உபன்னியசித்துவந்த ஸ்ரீமான் சோணசல பாரதியார் அவர்கள் பெருந்தகைமையும் கல்விவன்மையும் வியக்கற்பாலனவே. இவ்வுபன்னியாசம் இவ்வூரில் நடைபெற வேண்டுமென்று பற்பல முயற்சிகளையும் செய்துவரும் ஸ்ரீமான் பி. செ. முருகேச முதலியார் அவர்களது நன்முயற்சியும் செய்வன்மையும், உற்சவம் சேவிக்கவந்த ஒவ்வொருவரும் வியந்து கூறினர்களென்ருல் அவர் விடயமாக நாமென்னென்று புகழ்வது. அவர் நினைத்திருக்கின்றபடி அநேக சைவ சபைகளும் சைவ வுபன்னியாசங்களும் நடைபெறச் செய்யும்படி எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்ரும். இவ்விடயங்களுக்கெல்லாம் உடனிருந்து உபகாரஞ் செய்துவரும் ஷை ஆலய தர்மகர்த்தர் ஸ்ரீமான் பெ. கோவிந்தராசு முதலியார் அவர்கள் அரோக திடகாத்ர சரீரியாய் அபீஷ்ட சம்பூர்ணராய்ப் புகழோங்கி வாழும்படி பிரார்த்திப்பதுமன்றி, இதுபோல் மற்றத் தேவஸ்தானங்களில் நடைபெறும் மகோற்சவங்களிலும் அந்தந்த ஆலய தரும பரிபாலகர்கள் உபன்னியாசங்கள் புரிவித்துச் சைவசமயத்தை ஓங்கச்செய்யும்படி மிகவும் கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

சைவ சமயாபிமானி.

நியாயமாலா.

2-வது சதகம்.

(வெண்டாமரை ௩, இதழ் ௨, 48-ம் பக்கத் தொடர்ச்சி.)

9. கூர்மாங்க நியாயம் :— கூர்மம் = ஆமை, அங்கம் = உறுப்பு, நியாயம் = திருஷ்டாந்தம்.

இது முத்திவிருப்புடையோர் சத்தாதி விடயங்கள் தம்மெதிர்ப்படின், அவற்ருல் தம் நிலைமைக்குப் பங்கமுண்டாமென அஞ்சி, பொறிகளை அப் புலன்வழிப் போகவிடாது தத்தம் கோளகங்களி னிறுத்துத

விதுபோலவென்கின்றது. அதாவது: ஆமையானது தன்முன் யாதானு மொரு வஸ்து காணப்படின், அதனுல் தனக் கேதேனும் விபத்துண்டா மென வஞ்சித் தன்னுறுப்புக்களை, ஓட்டினுல் காக்கப்பட்ட தன்னுேர் சரீரத்தின்கண் அடக்கிக்கொள்ளல்போலவென்கின்றது.

10. மீனலோசன நியாயம்:— மீனம் = மீன், லோசனம் = கண், நியாயம் = திருஷ்டாந்தம்.

இது சற்குருகடாக்ஷ வீக்ஷண்யத்தால், உத்தமோத்தம வதிகாரி யான சீடன் பந்தநீக்கமுற விதுபோலவென்கின்றது. அதாவது: மீனு னது தன் முட்டைகளைத் திரும்பிப் பார்க்க, அப் பார்வை பட்ட மாத்தி ரத்தால் அம் முட்டைகள் பொரிந்து குஞ்சுகளாய்விடல்போலவென் கின்றது.

(வரும்.)

இதோபதேசி.

சந்நியாச விஷயம்.

(வெண்டாமரை ௫, இதழ் க, 24-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி மற்ெருரு விவிதிஷா சந்நியாசத்தின்கண் சுருதி ஸ்மிருதிப் பிரமாணங்களைக் கூறுதும்:

சுருதி:— "சந்நியாசி தண்டகமண்டலத்தையும், சீதநிவர்த்தி யின் பொருட்டுக் கந்தையையும் கௌபீனத்தையுங்கொள்க, மற்றவற்றை விடுக."

ஸ்மிருதி:—"பிரம்ஹ லோக பரியந்தமான சர்வ சம்சாரத்தையும் அசாரமெனக் கண்டு, பரமான்மப் பொருளாகிய சாரத்தைக் காணும் விருப்பால் மேலான வைராக்கியத்தை யடைந்த விரக்தர்கள் கிருகஸ்த வாச்சிரமத்திற்கு முன்னமே விவிதிஷா சந்நியாச வாச்சிரமத்தைத் தரிக் கிருர்கள்."

என்னும் தொடக்கத்துச் சுருதி ஸ்மிருதி வசனங்கள் விவிதிஷா சந்நியாச வாச்சிரமத்தைக் கூறியிருக்கின்றன.

இதுகாறும் இருவகையான விவிதிஷா சந்நியாசங் கூறப்பட்டன. இனி வித்வத் சந்நியாசங் கூறுதும்.

(வரும்.)

இதோபதேசி.

ஜ்ஞேபகாரி.

பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கென்றே உழைத்துவரும் ஓர் சிறந்த தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

இப் பத்திரிகையில் கலவி யபிவிருத்திக்குரிய பல விஷயங்கள், இந்திய வியவசாயத்தைப்பற்றிய பல விஷயங்கள், கைத்தொழில், வியாபாரம், கூட்டுறவு, ஜனஸமூஹத்தின் அபிவிருத்திக்குரிய பல விஷயங்கள், சிறந்த நீதிகளைப் போதிக்கக்கூடிய நாவல்கள், நாடகங்கள், மாணவர்களுக்கு உபயோகமான வியாசங்கள், நம் தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகான்களின் ஜீவிய சரித்திரங்கள், ஸ்திரீகளுக்கும் சிறுவர்களுக்கும் உபயோகமான பல நற்போதங்கள் ஆகிய பல விஷயங்களைக் குறித்துச் சிறந்த கற்றறிந்தவர்களால் வியாசங்கள் எழுதப்பட்டு வருகின்றன. நடை தெளிவானது: சிறுவர் சிறுமியர் முதலிய யாவரும் சுலபமாய்ப் படித்தறியக்கூடியது.

வருஷ சந்தா விகிதம். { இந்தியா, பர்மா, சிலோனுக்கு ரூ. 3—0—0.
{ வெளி நாடுகளுக்கு ,, 4—8—0

ஔவை.

நம் அருந்தமிழ் மொழியில் சிறந்த நீதி நூல்களையும் தனிப்பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம். பல நூல்களைத் தழுவியும் புலவர்களின் கர்ணபரம்பரையை அநுசரித்தும் வேலூர் வூரீஸ் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால் எழுதப்பட்டது.

விலை அணு 6.

"ஜ்ஞேபகாரி" சந்தாதாரர்களுக்கு மாத்திரம் அணு 5.

காரைக்காலம்மை சரிதை.

கற்பிலும் ஈசுவரபக்தியிலும் சிறந்த பெண்மணியும், சிவனடியார் அறுபத்துமூவரில் ஒருவரும், தெய்வக் கவிஞருமாகிய காரைக்காலம்மையென்னும் புனிதவதியாரது இனிய சரித்திரம்.

விலை அணு 1.

மானேஜர்,
ஜ்ஞேபகாரி ஆபீஸ், வேலூர்.

வெளியாய்விட்டது! வெளியாய்விட்டது!!

பக்திரசம் நிறைந்தது.

பிரகலாதன்.

பாகவத புராணத்தில் கூறப்படும் பிரகலாதன் கதையை அறியாத தமிழர் இல்லை. அது நாடகரூபமாக நவரஸாலங்காரங்களுடன் இனிய எளிய தெளிய தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இடையிடையே இனிய பாடல்கள் அமைந்துள்ளன. கம்பராமாயணம் பாகவதம் முதலிய நூல்களிலிருந்து அநேக மேற்கோள்கள் எடுத்து ஆளப்பட்டிருக்கின்றன. நாவல் படிக்க விரும்பும் தற்கால ஜனங்களுக்கு நாவல்போலவும் நாடகத்தின் அலங்காரங்களை அறிந்து இன்புற விரும்புவோருக்கு நாடகமாகவும் இது அமைந்துள்ளது. இதன் விலை அணா 8. கேட்லாக் வேண்டியவர் ½ அணா தபால் லேபில் அனுப்பவேண்டும்.

தனபதி.

படிப்பவர் மனத்தைப் பரமானந்தத்தில் ஆழ்த்தும் பலவித கற்பனாலங்காரக் கதை; இதில் தனபதி என்னும் அரசன் தன் வண்ணானை அரசனாக நியமிக்க, அவ் வண்ணான் அப்போதும் தன் புத்திபோகாமல், அரண்மனையை அவலமாக்குவது படிக்கப் படிக்க விடாநகைப்பை விளைவிக்கும்.

இதன் விலை அணா 2. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். தனிப் புத்தகம் வேண்டுவோர் 2½ அணா தபால் லேபில் அனுப்ப வேண்டும்.

அதிக பக்ஷமுள்ள நண்பர்கள் அனைவருக்கும் தெரிவிக்கத் தக்கது:—

நாவல் படிக்கவேண்டுமானால் இப்பேர்க்கொத்த நாவலையல்லவோ படிக்கவேண்டும். அது என்ன நாவல்? நமது ரங்கராஜு அவர்களால் எழுதிய நான்கு நாவல்கள்.

இராஜாம்பாள்	0 — 12 — 0
ஆனந்த கிருஷ்ணன்	0 — 12 — 0
சந்திரகாந்தா	0 — 12 — 0
மோஹனசுந்தரம்	0 — 12 — 0

பி. வி. கண்ணன் அண்டு கம்பெனி,

சிந்தாதிரிப்பேட்டை சென்னை.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

ஜீரண சம்பந்தமான தொந்தரவுகளை நீக்கி ஜீரண சக்தியை விருத்திசெய்கின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

ரத்த சுத்தி ரத்த விருத்திசெய்து தேக பலத்தைக் கொடுக்கின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

மூத்திர சம்பந்தமான பிணிகளை நீக்கி நரம்பு ஸ்தானங்களைப் பலப்படுத்துகின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

புத்தி தீக்ஷணியத்தையும் மனோற்சாகத்தையுங் கொடுக்கின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

சரீர சம்பந்தமான வியாதிகளை யெல்லாம் குணப்படுத்துகின்றன.

32 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு ரூ. 1.

வைத்தியசாஸ்திரி,

மணிசங்கர் கோவிந்தஜீ,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

157, பிராட்வே. 96, மவுண்ட்ரோட், மதராஸ்.

புதுவை — சைகோன் சின்னையா பிரஸ்.